# இயல் 4 இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்

1. தானியங்கிப் பண இயந்திரம் குறிப்பு வரைக.

இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளரான ஜான் ஷெப்பர்டு பாரன் என்பவர் தலைமையிலான குழுவொன்று பார்க்லேஸ் வங்கிக்காக இலண்டனில் 1961 ஜூன் தானியங்கிப் பண இயந்திரத்தை நிறுவியது. வங்கியில் வழங்கப்பட்ட காசோலையைக் கொண்டுதான் பணம் எடுக்கப்பட்டது. பின்னர் வாடிக்கையாளரின் ஆறிலக்கக் கடவுச்சொல் தருமாறு அது மேம்படுத்தப்பட்டது. பின்னர் வங்கிகளின் அட்டைகளில் தனிப்பட்ட அடையாள எண்ணை உருவாக்கித் தானியங்கிப் பண இயந்திரத்தில் பயன்படுத்தத் தொடங்கினர். வங்கி அட்டையே இல்லாமல் அலைபேசி எண் மற்றும் வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பணம் செலுத்தும் முறை வந்துவிட்டது.

2. அட்டை தேய்ப்பி இயந்திரம் குறிப்பு எழுதுக.

இது கட்டணம் செலுத்தும் கருவி என்றும் விற்பனைக் கருவி என்றும் அழைக்கப்படுகிறது. இந்த இயந்திரத்தில் வங்கி அட்டையின் காந்தப்பட்டை இருக்கும் பகுதியைத் தேய்க்கும்போது வாடிக்கையாளரின் விவரங்கள் இணையத் தொடர்பின் மூலம் வங்கிக் கணினிக்குச் செல்கிறது. கணினியால் அட்டை ஆராயப்பட்டுக் கடவுச் சொல் சரிபார்த்தபின் பணப்பரிமாற்றத்திற்கு வங்கி ஒப்புதல் அளிக்கிறது.

3. திறனட்டைக்கருவி குறிப்பு வரைக.

தமிழக மக்கள் பயன்படுத்தும் திறன் அட்டைகள் குடும்ப அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளது குடும்பத்தில் உள்ளவர்களின் ஆதார் எண்கள், தொலைபேசி எண்கள், முகவரி உள்ளிட்ட விவரங்களைச் சேர்த்துத் திறன் அட்டைகள் வழங்கப்படுகின்றன. குடும்ப உறுப்பினர் நியாயவிலைக் கடைக்குச் செல்கையில் அவர்களது திறன் அட்டை விற்பனைக் கருவியில் வருடப்படுகிறது. அங்கு விற்பனை செய்யப்படும் பண்டங்களும் விலை விவரங்களும் பற்றிய குறிப்புகள் பதிவு

செய்யப்பட்ட அலைபேசி எண்ணுக்குக் குறுஞ்செய்தியாக வந்துவிடுகின்றன.

4. ஆளறி சோதனைக் கருவி குறிப்பு வரைக.

ஆளறி சோதனைக் கருவி மனிதனின் கைரேகை, முகம், விழித்திரை ஆகியவற்றில் ஒன்றையோ அனைத்தையுமோ அடையாளமாகப் பதிவு செய்யவும், பதிவு செய்த அடையாளம் மூலம் மறுபடி ஆளை அறியவும் பயன்படுகிறது. நடுவண் அரசின் ஆதார் அடையாள அட்டையைப் பெறுவதற்கு நம்முடைய ஒளிப்படத்தையும் விழித்திரையையும் இரு கைகளின் பத்து விரல் ரேகைகளையும் பதிவு செய்கிறோம்.

5. இணைய வணிகம் குறிப்பு வரைக.

இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கேல் ஆல்ட்ரிச் 1979 இல் இணைய வணிகத்தைக் கண்டுபிடித்தார். இது இணைய உலகின் மற்றொரு பாய்ச்சலாகக் கருதப்படுகிறது. அமெரிக்காவில் மளிகைக்கடை தொடங்கப்பட்டது. 1991 இல் இணைய வணிகம் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வந்தது.